பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 93

22.09.2026

லஞ்சம் கேட்டு பெற்ற நகராட்சி பொறியாளர் மற்றும் தூய்மை பணியாளர் கைது

புகார்தாரர் திரு.ஜான், பாம்பூர், ராமநாதபுரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் அரசு சாலை பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரின் மேற்பார்வையளராக பணிபுரிந்து வருகிறார். புகார்தாரர் முடிந்த ஒப்பந்த பணிகளுக்கான ரசீதை நகராட்சி பொறியாளர் அலுவலகம், மானாமதுரை, சிவகங்கை மாவட்டத்தில் சமர்ப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து நிறைவு அறிக்கை வழங்கவும் மற்றும் ரசீதுக்குண்டான இறுதி தொகையை விடுவிக்கவும் திரு.பட்டுராஜன், நகராட்சி பொறியாளர், நகராட்சி அலுவலகம், மானாமதுரை, சிவகங்கை மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.4,00,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிவகங்கை பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 22.09.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பட்டுராஜன், நகராட்சி பொறியாளர் அவர்களின் உத்தரவின்பேரில் திரு.சேதுபதி, தூய்மை பணியாளர் ரூ.2,00,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

PRESS RELEASE – 93
22.09.2026

MUNICIPAL ENGINEER AND SANITARY WORKER ARRESTED FOR BRIBE

The complainant, Tr.John, Pamboor, Ramanathapuram District, is a supervisor with a private contractor undertaking government road laying works. Tr.Pattutrajan, Municipal Engineer, Municipal Office, Manamadurai, Sivagangai District demanded a bribe of Rs.4,00,000/- from the complainant for processing the completed road work reports and releasing the final settlement bill. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Sivagangai detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (22.09.2026). During trap proceedings, on the instructions of Tr.Pattutrajan, Municipal Engineer, Tr.Sethupathy, Sanitary Worker demanded and received the bribe amount of Rs. 2,00,000/- from the complainant. Both accused were arrested and sent to judicial custody.